ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2182/35 - 2020 ජූලි මස 01 වැනි බදදා - 2020.07.01
*2182/35 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளர் குறிப்பு இல. : ஹங்கு/பிசெ/3/2/1/495CII.
காணி அமைச்சின் குறிப்பு இல. : 13/97/ஈ/456.

மமா/ஹங்/தியதிலக்க மத்திய மகா வித்தியாலயத்தின் அபிவிருத்தி செயற்பாட்டிற்கு தேவையான கீழே காட்டப்பட்டுள்ள காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தின், நுவரெலியா மாவட்டத்தின், ஹங்குரான்கெத்த பிரதேச செயலாளர் பிரிவின் தியதிலக்க கோரளை, இல. 495 சீ, பல்லேமலுவ கிராம அலுவலர் பிரிவின் ஹக்குரான்கெத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள, மு. பீ. நு. 3398 ஆம் இலக்க அடிப்படை வரைபடத்தில் காணித்துண்டு இல. 01 என நில அளவை மேற்கொள்ளப்பட்டுள்ள 1.0591 ஹெக்டயார் (02 ஏக்கர் 02 றூட் 18.7 பேர்ச்) விஸ்தீரணங் கொண்ட பல்லேமலுவ எனும் பெயருடைய காணியின் விபரம் :

*01. துண்டு இல. 01*

காணியின் பெயர் : பல்லேமலுவ; உரிமை கோருபவர் : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு; விஸ்தீரணம் : (02 ஏக்கர், 02 றூட், 18.7 பேர்ச்) 1.0591 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு ஹங்குரான்கெத்த பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரிமை கோரல் தொடர்பான உறுதிப்பத்திரங்கள் போன்றவை விசாரணையின்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஐ. எம். சேனாநாயக்க,
பிரதேச செயலாளர்,
ஹங்குரான்கெத்த.

பிரதேச செயலகம்,
ஹங்குரான்கெத்த,
2020, யூலை 01.

7 - 435